**1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி.

2026 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ம் நாள் செவ்வாய்க்கிழமை

**அசல் வழக்கு எண்.53/2022**

**TNTL06-000073-2022**

P.தங்கம் . . . வாதி

//எதிர்//

திருநெல்வேலி மாநகராட்சி

அதன் ஆணையாளர் மூலமாக . . . பிரதிவாதி

இந்த வழக்கானது, 11.08.2026 இன்று இந்நீதிமன்றத்தின் முன்பு விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.ஜேசுதாஸ், அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.சுப்பிரமணியன் அவர்கள் ஆஜராகியும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது, நிரந்தர உறுத்துக்கட்டளை, விளம்புகை, செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

***வாதியை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் வாதி ஆஜராகவில்லை. வாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியிருந்த போதிலும் வாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்கு தயாராக இல்லை. இந்த வழக்கானது 3 ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையில் இருந்து வருகிறது. வாதிக்கு போதுமான வாய்ப்பு குறுக்கு விசாரணைக்கு வழங்கப்பட்டு விட்டது. இருந்தபோதிலும் வாதி தரப்பில் குறுக்கு விசாரணையை முன் எடுக்கவில்லை.***

***முடிவாக, நீதியின் நலன் கருதி வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும் வாதியின் வருகையின்மைகாக இந்த வழக்கு தள்ளுபடி (Dismissed for Default) செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.***

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 11ம் நாளாகிய இன்று என்னால் அவையறிய தீர்ப்புரை பகரப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY

Judgment uploaded on 11.08.2026
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.08.11 19:05:06 +0530

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

1வது கூ.மா.உ.நீ. திலி
அ.வ.எண்.53/2022
வரைவு / நேரிய தீர்ப்புரை
நாள். 11.08.2026.